# அம்மாக்கண்ணு பாட்டு

"பூட்டைத் திறப்பது கையாலே – நல்ல
மனந் திறப்பது மதியாலே"
பாட்டைத் திறப்பது பண்ணாலே – இன்ப
வீட்டைத் திறப்பது பெண்ணாலே.

ஏட்டைத் துடைப்பது கையாலே – மன
வீட்டைத் துடைப்பது மெய்யாலே;
வேட்டை யடிப்பது வில்லாலே – அன்புக்
கோட்டை பிடிப்பது சொல்லாலே.

சி. சுப்ரமணிய பாரதியார்

www.kids.noolagam.com